வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 36/2020

வழக்குசாட்சி LW7/PW5

| பெயர் | தசரதன் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | செஞ்சையா | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 63 |

தேதி 18.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் செம்புலிவரத்தில் வசித்து வருகிறேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் காண்பிக்கப்படும் இரண்டாம் கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. கடந்த 2019 , தேதி, மாதம் ஞாபகமில்லை. மதியம் புழல் ஏரிக்கரை ஓரமாக ஒருநாள் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அதிக போலீசார் நின்றுக் கொண்டிருந்தார்கள். அங்கே ஏதோ பிரச்சனை நடந்ததாகவும், அதற்கு என்னை சாட்சியாக கையொப்பம் செய்யுமாறும் கூறினார்கள். ஆனால் அந்த பிரச்சனைப் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 04.04.2019 பகல் 12 மணியளவில் புழல் ஏரிக்கரை அருகில் நானும் எனது நண்பர் வெங்கடேசன் வந்துகொண்டிருந்தபோது அங்கு புழல் போலீசார் 6 நபர்களை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது

புழல் காவல் உதவி ஆய்வாளர் என்னையும் எனது நண்பரான வெங்கடேசன் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாகவும், இருக்க கோரி நான் சம்மதித்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பத்தினை செய்துவிட்டு போலீஸ் விசாரணையின்போதும் மேற்படி தகவலை கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.